[26th March 1965

திரு. து. ப. அழகமுத்து: வரி ஏமாற்றுவதற்கென்ற நோக்கத்தோடு வேறு பெயரில் வர்த்தக ஸ்தாபனங்களை வைத்தவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்ட வியாபாரிகள் எத்தனை பேர்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அம்மாதிரி ஏமாற்றுவதற்கு சட்டத்தில் இடம் இல்லை. ஏற்கெனவே யார் வியாபாரி என்றாலும் அவர் மீது 'பர்சனல்' ஆக வழக்கு தொடரப்படுகிறது, கட்ட வேண்டிய வரி பாக்கிக்கு.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: வியாபாரிகள் வரி பாக்கி மாத்திரம் அல்ல, வியாபாரிகளுக்கே பாக்கி வைக்கிற காரணத்தால், வேறு பெயரில் லைசன்சை மாற்றி வியாபாரம் செய்வது அரசாங்கத்திற்கு தெரியுமா? அப்படி இருந்தால் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுக்க இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர்கள் வேறு எந்த வியாபாரம் செய்தாலும், வரிக்காக அவர் சொத்தை நாம் எடுத்துக் கொள்ளலாம். அவருக்கு சொத்து இல்லை என்று சொன்னால்தான் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறதே தவிர, மற்ற வகையில் பணம் இருக்குமானால், சொத்துக்கள் இருக்குமானால் சொத்துக்கள் மீது நடவடிக்கை எடுக்க வழி இருக்கிறது.

Collection by way of penalty under Madras General Sales Tax Act, 1959

* 335 *Q.*—Sri M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the amount collected by way of levy of penalty for belated payment of Sales-tax under section 24 (3) of the Madras General Sales Tax Act, 1959, during the year 1963–64?

The Hon. Sri R. VENKATARAMAN: A sum of Rs. 1,10,660.50 has been collected by way of penalty under section 24 (3) of the Madras General Sales Tax Act, 1959, during the year **1963–64**.

மாவட்டங்களில் நடைபெற்ற தொழில் கருத்தரங்குகள்

* 336 கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்டந்தோறும் நடத்தப்பட்டுவரும் தொழில் கருத்தரங்குகளின் நோக்கமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: குறிப்பாக, அந்தந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய வளங்களையும், திறன்களையும் ஒட்டி, பற்பல தொழில் துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை உத்தேச தொழில் முதலாளிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பது தான் இக்கருத்தரங்குகளின் நோக்கமாகும்.

26th March 1965]

திரு. ம. கமலநாதன்: அண்மையில் சேலத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் சொல்லப்பட்ட கருத்துக்களை ஆராய கலெக்டர் தலைமை கொண்ட ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. கருத்தரங்கு நடந்து 6 மாதங்கள் ஆகியும் இன்னும் வேண்டிய நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த நடவடிக்கை எல்லாம் சர்க்கார் எடுப்பது இல்லை. இந்த 'நான்-அபிஷியல் குழு' எடுக்கிறார்கள். இந்தக் கருத்தரங்கு சர்க்கார் செலவிலோ, சர்க்கார் அலுவலாகவோ செய்யப்படுவது இல்லை. அந்தந்த ஜில்லாக்களில் இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள், தொழில் ஊக்கம் கொண்டவர்கள் சேர்ந்துதான் ஒரு கூட்டம் போட்டு, ஒரு மாநாடு மாதிரி வைத்து, கருத்தரங்கில் 2 நாள் விவாதித்து முடிவு செய்கிறார்கள். பிறகு ஒரு செயற்குழு அமைக்கப்படுகிறது. அவ்வாறு அமைக்கவில்லை என்று சொன்னால், ஒருவேளை இதை ஆர்கனைஸ் செய்தவர்கள் பல அலுவல்களில் ஈடுபட்டிருக்கிற காரணம் ஆக இருக்கலாம்.

திரு. அ. ப. அழகமுத்து: இந்தக் கருத்தரங்கு எந்தெந்த மாவட்டங்களில் நடைபெற்று இருக்கிறது? நடைபெறாத மாவட்டங்களில், தொழில் அதிபர்களே முன்வந்து நடத்த முற்படவில்லை என்றால், சர்க்காரே இதை நடத்த முயற்சிகள் எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மதுரை, ராமநாதபுரம், சேலம், வட ஆற்காடு இந்த 4 ஜில்லாக்களில் இந்தக் கருத்து அரங்கு நடைபெற்றிருக்கிறது. தொழில் அதிபர்கள், தொழில் ஊக்கம் உள்ளவர்கள் நடத்த முன்வரவில்லை என்றால், சர்க்கார் கருத்தரங்கை நடத்துவதில் எந்த லாபமும் இல்லை. சர்க்கார் இலாகா இருக்கிறது. சர்க்கார் இலாகா மூலமாகச் செய்ய வேண்டிய பிரசாரத்தைச் செய்துகொண்டுதான் இருக்கிறது. மக்கள் ஊக்கத்தைத் தட்டி எழுப்புவதற்கு செய்யும் முயற்சி இது.

திரு. எம். எஸ். மணி: மாவட்டங்களில் நடைபெறும் கருத்தரங்கிற்கு யார் அழைக்கப்படுகிறார்கள்? யாரால் அழைக்கப்படுகிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கே ஒரு செயற்குழு அமைக்கிறார்கள். செயற்குழுத் தலைவராக கலெக்டர் இருக்கிறார். சர்க்காரிலிருந்து பொதுவாக எல்லா அதிகாரிகளும், டைரக்டர் ஆப் இன்டஸ்ட்ரீஸ், ஸ்டேட் ஜியாலஜிஸ்ட், பலவிதமான அதிகாரிகள் அழைக்கப்படுகிறார்கள். அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள், தொழிலில் ஊக்கம் உள்ளவர்கள்—இவர்களை எல்லாம் சேர்த்து ஒரு கமிட்டி அமைத்து அழைக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, இதுவரை நடைபெற்ற கருத்தரங்குகள் மூலம் உருவான பலன் ஏற்பட்டு இருக்கிறதா? ஏற்படாது இருந்தால், அவர்கள் கருத்

தரங்கை நடத்துவதற்குப் பதிலாக, அரசாங்கமே முயற்சி எடுத்து தொழிலதிபர்களைக் கூட்டுவதன் மூலம் இன்னும் உருவான பலன் ஏற்படாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழில் நடைபெறுவதற்குத் தொழில் அதிபர்கள் ஊக்கம்தான் அவசியம். கருத்து அரங்கு நடத்துவதற்குப் போதிய ஊக்கம் இல்லை என்று சொன்னால் சர்க்கார் அரங்கு நடத்துவது சரியல்ல. இப்போது நாம் பல வசதிகள் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். கடன் வசதி கொடுக்கிறோம். நிலம், தண்ணீர், மின்சார வசதிகள் எப்போது கேட்டாலும், நாம் அளித்துக்கொண்டு இருக்கிறோம். இவற்றைப் பயன்படுத்துவது மக்களுடைய சொந்த முயற்சியாக இருக்கவேண்டும். 'பீபிள்ஸ் மூவ்மென்ட்' டாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்களே செய்யவேண்டுமென்று நாம் தூண்டிக்கொண்டு இருக்கிறோம்.

திருமதி சி. குழந்தையம்மாள்: சில தொழில்கள் அதிகமாக வளர்ச்சி அடைய டில்லி அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தேவையாக இருப்பதால், அந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இம்மாதிரி கருத்தரங்கில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சில சமயங்களில் வருகிறார்கள். சில சமயங்களில் வருவதில்லை. இந்தக் கருத்து அரங்கில் முடிவு செய்ததை நிறைவேற்ற ராஜ்ய சர்க்கார் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இம்மாதிரி கருத்து அரங்கை நடத்த மாவட்ட அதிகாரிகளை ஏற்பாடு செய்வதற்கு சர்க்கார் வேண்டுகோள் விடுத்து இருக்கிறதா? இல்லை என்றால் என் விடவில்லை?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்கார் எந்த வேண்டுகோளும் விடுவதற்கு இல்லை. ஆங்கே இருக்கிற மக்களுக்குத் தெரியும், இந்தவிதமாகக் கருத்து அரங்கு ஆரம்பித்தால் சர்க்கார் உதவி செய்யும் என்று . அவர்கள் முன்வந்தால் உதவி செய்கிறோம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: வட ஆற்காடு மாவட்டத்தில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் கூறப்பட்ட யோசனைகளைச் சர்க்கார் பரிசிலித்ததா? எந்த அளவுக்கு அந்த யோசனைகளை அமுல் நடத்த சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்களே பார்த்துக் கொள்ளலாம். இந்தக் கருத்து அரங்கிலே நடைபெற்றதை எல்லாம் புத்தக ரூபமாக வெளியிட்டு இருக்கிறார்கள். அதைத் தயவுசெய்து எடுத்துப் பார்த்தால் நல்ல முறையிலே பல அரிய யோசனைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. என்ன தொழில்கள், எந்த அடிப்படையில் ஏற்படுவதற்கு வசதி

26th March 1965]

இருக்கிறது, இவ்வாறு செய்வதற்கு சர்க்கார் என்ன வசதிகள் கொடுக்க முடியும் என்றெல்லாம் அந்த அறிக்கையிலே இருக்கிறது. அதைப் படித்தால் நல்ல விவரங்கள் கிடைக்கும்.

திரு. எம். எஸ். மணி: இந்தக் கருத்தரங்கிலே தொழிலதிபர்கள் யோசனைகள் கூறுகிறார்கள். தொழிலாளர் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களுடைய ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது யார் தொழில் அமைப்பார்களோ, தொழில் உண்டு பண்ணுவார்களோ, அவர்கள் கலந்து செய்கின்ற முயற்சி. ஆனால் தொழிலாளிகள் பிரதிநிதிகள் வரக்கூடாது என்று எந்தவிதமான விலக்கும் கிடையாது. ஓரிரண்டு இடங்களில் தொழிலாளிகள் பிரதிநிதிகளைப் பார்த்ததாக ஞாபகம். எந்த இடத்தில் என்று சொல்வதற்கில்லை.

Special Engineering Staff at Madurai

* 337 Q.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any special engineering staff was posted at Madurai to look into the possibilities of bringing under cultivation the tank bed lands in Ramanathapuram and Madurai districts; and

(*b*) if so, what is the stage of its work?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Desilting-cum-reclamation of irrigation tanks in Salem

* 338 Q.—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state whether the work of desilting and reclaiming irrigation tanks will be taken up in Salem district and if so, when?

கனம் திரு. பூ. கக்கன்: வட ஆற்காடு மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் பாசன ஏரிகளில் தூர் அகற்றிச் சீராக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது நாளடைவில் சேலம் மாவட்டத்திற்கும் மற்ற மாவட்டங்களுக்கும் நீடிக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஏரி எதுவாயிலே தூர் எடுக்கும் திட்டம் இதுவரைக்கும் எந்தெந்த மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வேலை முடிவடைந்திருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: பல மாவட்டங்களிலும் இந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எந்த மாவட்டத்திலும் பூரா வேலையும் முடியவில்லை.

திரு. சா. கணேசன்: ராமனாதபுரம் ஜில்லாவிலே பெரும்பகுதியான ஏரிகளிலே அந்த உள்வாய் பெரும்பாலும், புறவாய் ஒரு